# மான்மின் செய்திகள்

Manmin Ministries India 15D/41, Ponnankinaru St, Villivakkam, Chennai - 49, India. Ph: 044-26172471 Email: manminnewsasia@gmail.com

## பரிசுத்த ஆவியானவரின் காற்று பாகிஸ்தானையும் இலங்கையையும் புதுப்பித்தது.

### போதகர்.டெய்சிக் கில்-ன் போதகர்கள் கருத்தரங்கும் கைக்குட்டை சுகமாக்கும் படைமுயற்சி கூட்டங்களும்

①


②


③


④


⑤


⑥


பாகிஸ்தானிலும் இலங்கையிலும் தேவனுடைய வல்லமையும் ஜீவ வார்த்தையும் வெளிப்பட்டன. ■ புகைப்படம் 1: ஏறக்குறைய 10,000 மக்கள் பங்கு பெற்ற படைமுயற்சி கூட்டம் பூரண சுவிசேஷ சபையில் நடத்தப்பட்டது. ■புகைப்படம் 2: கிருல்னா போனாவில் கைக்குட்டை சுகமாகுதலின் படைமுயற்சி கூட்டம். ■புகைப்படம் 3: போதகர் டெய்சிக் கில் அவர்கள் வல்லமை நிறைந்த கைக்குட்டையுடன் வியாதியஸ்தருக்காக ஜெபித்தார். ■ புகைப்படம் 6: போதகர் டெய்சிக் கில், அவரது பாகிஸ்தான் ஊழிய நற்பணிக்காக அங்கீகரிக்கப்பட்டு, முனைவர் பட்டம் பெற்றுகொண்டார் (நடுவில்).

97% முஸ்லீம் ஜனத்தொகையுள்ள பாகிஸ்தானிலும், 69% புத்தர்கள் உள்ள இலங்கையிலும் வெளிப்பட்ட அற்புத அடையாள வல்லமையான கிரியைகளால் சுவிசேஷம் ஜூவாலித்து எரிகின்றது. 2012, அக்டோபர் 16 முதல் 26 வரை, போதகர். டெய்சிக் கில் (தேஜூயான் மான்மின் திருச்சபை) உடன் மான்மின் பணித்தள குழுவினர் பாகிஸ்தான் மற்றும் இலங்கைக்கு பணித்தள பயணம் மேற்கொண்டனர்.

அக்டோபர் 17, 2012 அன்று போதகர். டெய்சிக் கில் அவர்களுக்கு முனைவர் பட்டமளிப்பு விழா பாகிஸ்தான் லாகூரில் உள்ள அம்பாசிடர் உணவகத்தில் நடத்தப்பட்டது. பிஷப்மார்களின் சங்கம் மற்றும் தேசிய திருச்சபைகளின் தலைவர்களால் போதகர். கில் அவர்களுக்கு பாகிஸ்தானிய ஊழியத்திற்கு வழங்கிய அவருடைய பங்களிப்பை அங்கீகரித்து, ஊழியம் மற்றும் ஆசிரியரியலில் முனைவர் பட்டம் வழங்கப்பட்டது. போதகர். கில் அவர்கள் கடந்த பத்து ஆண்டுகளில் 14 முறை பாகிஸ்தானிற்கு சென்று கருத்தரங்குகள் மற்றும் கைக்குட்டை சுகமாக்குதலின் படைமுயற்சி கூட்டங்களை 12 பட்டணங்களில் நடத்தியிருக்கிறார்.

கூடுதலாக, ப்ரைட் ஃபுட்சர் சொஸைட்டி என்ற அரசாங்கம் சாரா அமைப்பு (NGO), அறிவர்.ஜேராக் லீ அவர்களுக்கு, அவர்தம் ஆத்துமாக்கள் இரட்சிப்பிற்கான அர்ப்பணத்திற்காக நன்றி செலுத்தும்வகையில் நல்ல சமாரியன் பரிசளித்தனர்.

பின் தொடர்ந்து நடைபெற்ற கருத்தரங்கில், போதகர். கில் அவர்கள் அறிவர்.ஜேராக் லீ அவர்களது, "இஸ்ரவேலே விழித்தெழும்பு" என்ற புத்தகத்தின் அடிப்படையில் மானுட வேளாண்மையில் தேவனுடைய அநாதி தீர்மானத்தை குறித்து செய்தியை பிரசங்கித்தார். மாலையில், ஐசக் TV–யின் தலைவர் போதகர் அன்வர் ஃபசல் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க, கைக்குட்டை சுகமாகுதலின் படைமுயற்சி கூட்டம் பூரண சுவிசேஷ சபையில் நடத்தப்பட்டது. போதகர். கில் படைமுயற்சி கூட்டத்தில், ஏன் இயேசு மட்டுமே நம்முடைய ஒரே இரட்சகராய் இருக்கிறார் என்ற செய்தியை பிரசங்கித்து, அதற்கான நான்கு காரணங்களை விளக்கி கூறினார். மேலும், வியாதியஸ்தர்களுக்காக வல்லமை நிறைந்த கைக்குட்டையை வைத்து ஜெபித்தார் (அப்: 19:11–12)

அக்டோபர் 18 அன்று, போதகர்கள் கருத்தரங்கு, போதகர் அன்வர் ஃபசல் அவர்கள் ஊழியம் செய்யும் ஜீவ நதி திருச்சபையில் நடைபெற்றது. செய்தியாளரான, போதகர். கில் அவர்கள் "விசுவாசத்தின் அளவு" என்பதிலே கருத்தரங்கு உரையாற்றினார். பங்காளர்கள் ஆவிக்குரிய செய்தியினால் கவரப்பட்டு, அறிவர். ஜேராக் லீ அவர்களது செய்திகளை அதிகமாக தந்தருளும்படியாக அவரை கேட்டுக்கொண்டனர்.

அக்டோபர் 20 அன்று, இலங்கை கொழும்புவிலுள்ள கிருல்னாபோனாவில் கைக்குட்டை சுகமாகுதலின் படைமுயற்சி கூட்டம் நடத்தப்பட்டது. போதகர். கில் அவர்கள் "தேவன் மனிதர்களை பண்படுத்துவதன் காரணம்" மற்றும் "தேவன் நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தை நாட்டியதின் காரணம்" என்ற பொருள்களில் செய்தியளித்தார். அக்டோபர் 21 அன்று, அவர் இயேசு கிறிஸ்துவை குறித்து வட்டலா கைக்குட்டை சுகமாகுதலின் படைமுயற்சி கூட்டத்தில் பிரசங்கித்தார்.

இரண்டு நாளாக நடத்தப்பட்ட கைக்குட்டை சுகமாக்குதலின் படைமுயற்சி கூட்டத்தில் பல வகையான வியாதிகளிலிருந்தும் வேதனைகளிலிருந்தும் சுகம் பெற்ற பின்னர் மக்கள் பலர் ஜீவனுள்ள தேவனுக்கு மாபெரும் மகிமையை செலுத்தினர். ஞான தயாசிங்கே (ஆண், வயது 6) சுவாச கோளாரினால் எப்போதும் சுவாச இயந்திரத்தை சார்ந்திருக்க வேண்டியிருந்தது. ஆனால் படைமுயற்சி கூட்டத்தின்போது தனது கழுத்துப் பகுதியிலும் நெஞ்சிலும் இதமான சூட்டை உணர்ந்து அவன் சுகமடைந்தான். S.நிகேல் ஃபெர்னான்டோ (ஆண், வயது 54) விபத்தினால் உண்டான பின் துயர்ச்சி மறைந்தது என கூறினார். பிரகத்தி (பெண், வயது 60) கண்பார்வை திரும்ப பெற்றார். மரதாயி (பெண், வயது 65) முதுகு தண்டுவட வேதனையிலிருந்து சுகம் பெற்றார். இதனோடுகூட பல சாட்சிகள் நிரம்பி வழிந்தன.

அக்டோபர் 22 அன்று, கொழும்பு போதகர்கள் கருத்தரங்கு நடத்தப்பட்டது. போதகர். கில் அவர்கள் "விசுவாசத்தின் அளவு" என்பதில் உரையாற்றினார். பங்கு பெற்ற போதகர்கள் "இந்த பிரசங்கங்கள் மெய்யாகவே வேதாகமத்தில் வேறூன்றியுள்ளது. அது ஆவிக்குரியதாகவும் ஆழமாகவும் இருந்தது" என்று கூறினர். அக்டோபர் 23 அன்று, காண்டியில் உள்ள போதகர்களுக்கு "சிலுவையின் செய்தி" என்ற கருப்பொருளில் கருத்தரங்கு நடைபெற்றது. கருத்தரங்கு முடிவு பெற்றதில் பணித்தள குழுவின் முழு ஏற்பாடுகளும் நிறைவடைந்தன. பரிசுத்த சுவிசேஷத்தின் இன்றிமையாத பொருளை அனுபவித்த போதகர்கள் வரவிருக்கும் கருத்தரங்குகளிற்கு ஏற்கனவே எதிர்ப்பார்த்து கொண்டிருக்கின்றனர்.

### ஐசக் TV மூலமாக அநேக ஆத்துமாக்கள் அறிவர்.ஜேராக் லீ அவர்களை சந்திப்பர்.



பாகிஸ்தானில் உள்ள ஐசக் TV மூலமாக ஆத்துமாக்கள் பலர் ஜீவனுள்ள செய்திகளை கேட்பர்.

தற்போது ஐசக் TV அறிவர். ஜேராக் லீ அவர்களது செய்திகளை ஆங்கிலத்திலும் உருதுவிலும் நாள் ஒன்றிற்கு ஆறு மணி நேரமாகவும், தேவனளித்த மான்மின் பாடல்கள், நடன நிகழ்ச்சிகளை நாள் ஒன்றுக்கு இரண்டு மணி நேரமாகவும் பாகிஸ்தான் மற்றும் மத்திய கிழக்கில் ஒளிபரப்பி கொண்டிருக்கின்றது.

ஐசக் TVயின் தலைவர் போதகர் அன்வர் ஃபசல் அவர்கள் "சமீபத்தில் ஐசக் TV U.K. ஐரோப்பா மற்றும் ஆப்பிரிக்கா முழுவதும் சென்றடையக்கூடிய செயற்கைக்கோள் நிலையத்துடனான உடன்படிக்கையில் கையெழுத்திட்டுள்ளது. ஆகவே பின் நாட்களில் இந்நிகழ்ச்சிகள் அப்பகுதிகளில் ஒளிபரப்பப்படும். இதன்மூலம், எண்ணற்ற மக்கள் சத்தியத்தை அறிந்து இரட்சிப்பை அடைவர்" என்று கூறினார்.

# அன்பு தீங்கு நினையாது

"அன்பு அயோக்கியமானதைச் செய்யாது, தற்பொழிவை நாடாது, சினமடையாது, தீங்கு நினையாது" (1கொரிந்தியர் 13:5)

ஒரே சூழ்நிலையை இரண்டு பேர் பார்க்கிறார்கள் என்று வைத்துக்கொள்வோம். ஒருவர் நேர்மறையாக சிந்திக்கையில், மற்றொருவர் எதிர்மறையான சிந்தையுடன் நியாயந்தீர்ப்பார். வேறொரு சூழ்நிலையில், தான் கேள்விப்பட்ட மோசமான விஷயம் தன்னைப்பற்றி என்று நினைக்கும் ஒருவர் இருக்கலாம். அவர்கள் பேசும் விஷயம் அவரை பற்றி இல்லை என்றாலும்கூட இப்படி நினைப்பவராய் இருந்தால் பின் இவர் அவர்களை சங்கடப்படுத்தி விடுவார். நற்குணம் நிறைந்த சிந்தை நமக்கு சமாதானத்தையும் வாழ்வையும் தரும், ஆனால் தீமையான சிந்தைகள் கஷ்டத்திலே முடிவடைந்து நம் வாழ்வை சந்தோஷமற்றதாய் மாற்றி விடும். கூடுதலாக, இப்படிப்பட்ட எண்ணங்கள் மற்றவர்கள் மீது எதிர் மறையான தாக்கத்தை கொண்டிருக்கும்.

இங்கு "தீங்கு நினையாது" என்பது தேவனுடைய சித்தத்திற்கு ஒத்துப்போகாத எதையும் குறிக்கிறது. பின்னர், தீங்கு நினையாத ஆவிக்குரிய அன்பை அடையப்பெற நாம் என்ன செய்யவேண் டும்.



தலைமை போதகர் டாக்டர்.ஜேராக் லீ

## 1. தீங்கு நினையாது

**1) மற்றவர்களுக்கு தீங்கான சூழல் ஏற்பட வேண்டுமென நீங்கள் விரும்பினால், அந்த எண்ணத்தை உங்களை விட்டு நீங்கள் விரட்ட வேண்டும்.**

மிகுந்த ஆஸ்தியை அனுபவிக்கும் உங்களது நண்பர் மேல் நீங்கள் பொறாமை கொள்கிறீர்கள் என்று வைத்துக்கொள்வோம். "அவன் ஐசுவரியவானாய் இருக்கிறான், நான் எப்படி இருக்கிறேன்? அவன் தோற்றுப்போக வேண்டும்" என்று நீங்கள் நினைத்தால் இது ஒரு பொல்லாத நினைப்பு. உங்களது இருதயத்தில் ஆவிக்குரிய அன்பு இருக்குமேயாயின் இப்படிப்பட்ட பொல்லாத நினைப்பு உங்களுக்கு இருக்கவே இருக்காது.

யாரானாலும் தங்களது அன்பான நபர்கள் வியாதியாக வேண்டும் அல்லது விபத்துக்குள்ளாக வேண்டுமென விரும்பமாட்டார்கள். நீங்கள் எப்போதும் உங்களது அன்பான மனைவி அல்லது கணவன் ஆரோக்கியமாகவும், விபத்துகளில்லாமல் சுகமாய் இருக்கவேண்டும் என்றே விரும்புவீர்கள். நீங்கள் மற்றவர்களுக்கு ஏதாவது தீங்கு ஏற்பட வேண்டும் என்றும், மற்றவர்களின் சந்தோஷமற்ற நிலையில் அதைக் கண்டு மகிழ வேண்டும் என்றும் விரும்புகின்றீர்களென்றால், இது எந்த அளவுக்கு ஆவிக்குரிய அன்பு உங்களில் இல்லை என்று காட்டுகிறது. அதுவுமல்லாமல், மற்ற மக்களுடைய அநியாயங்கள் அல்லது பலவீனங்களை நீங்கள் அறிய விரும்புவது எதற்கென்றால், அதைப்பற்றி மற்றவர்களிடம் சொல்வதற்கே.

தவறான பாதையில் செல்கிற ஒரு நபருடைய சூழ்நிலையைக் குறித்த உண்மை நிலையை நீங்கள் அறிந்து, அவரை நல்ல வழியில் நடத்த, நீங்கள் நேரங்களுக்கும் சந்தர்ப்பங்களுக்கும் ஏற்ப கவனித்து செயல்பட வேண்டும். ஆனால் இந்த சந்தர்ப்பம் ஏற்படாதபோதும், இப்படிப்பட்ட காரியங்களில் நீங்கள் ஏன் ஆர்வமாய் இருக்கிறீர்கள் என்றால், உங்களுக்குள் மற்றவர்களை குறித்து வசை கூறி புரணி பேச விரும்பும் சத்தியமற்ற ஆசை இருப்பதாலே.

நீதிமொழிகள் 17:9, "குற்றத்தை மூடுகிறவன் சிநேகத்தை நாடுகிறான், கேட்டதைச் சொல்லுகிறவன் பிராண சிநேகிதரையும் பிரித்துவிடுகிறான்" என்று கூறுகிறது. நல்லவர்களாயும் தங்கள் இருதயத்தில் அன்புள்ளவர்களாயும் இருப்பவர்கள் மற்றவர்களுடைய தப்பிதங்களை மூட முயற்சிப்பர். மேலும், மற்றவர்கள் சிறந்தவர்களாய் இருக்கும்போது அவர்கள் பொறாமையாகவோ அல்லது போட்டி பகை மையாகவோ இருக்கமாட்டார்கள். மாறாக அவர்களுடன் சேர்ந்து களிகூர்ந்து சந்தோஷப்படுவர்.

**2. மற்றவர்கள் மேல் நியாயத்தீர்ப்பும் குற்றச்சாட்டும் கூறினால், அந்த எண்ணத்தை நீங்கள் உங்களை விட்டு அகற்ற வேண்டும்.**

விசுவாசி ஒருவர், விசுவாசிகள் செல்லக்கூடாத இடத்திற்கு போவதை நீங்கள் பார்ப்பதாக வைத்துக்கொள்வோம். பின், எப்படிப்பட்ட எண்ணத்தை நீங்கள் கொள்வீர்கள்? 'அவர் எப்படி இப்படி செய்யலாம்?' என்று அவரை குறித்த இப்படிப்பட்ட எதிர்மறையான கருத்து உங்களுக்கு இருக்கலாம். அல்லது 'ஏன் இப்படிப்பட்ட இடத்திற்கு இவர் போகிறார்?' என்று ஆச்சரியப்பட்டு அதன்பின், உங்கள் எண்ணத்தை மாற்றிக்கொண்டு அவர் அங்கு போவதற்கு கட்டாயம் காரணம் இருக்கவேண்டும் என்று உணர்ந்துகொள்வீர்கள். உங்களுக்குள் ஆவிக்குரிய அன்பு இருந்து, தீமை உங்கள் இருதயத்தில் இல்லையென்றால், உங்களுக்கு முதல்முறையே எம்மாதிரியான எதிர்மறையான சிந்தனையும் இராது. நல்லதல்லாத ஒன்றை நீங்கள் கேள்விப்பட்டாலும்கூட, மெய்யாகவே நடந்தது என்ன என்பதை சரி பார்க்கும் வரையில், நீங்கள் யாரையும் நியாயந்தீர்க்கமாட்டீர்கள்.

யாக்கோபு 4:12, "நியாயப்பிரமாணத்தைக் கட்டளையிடுகிறவர் ஒருவரே, அவரே இரட்சிக்கவும் அழிக்கவும் வல்லவர்; மற்றவனைக் குற்றப்படுத்துகிறதற்கு நீ யார்?" தேவன் ஒருவர் மட்டுமே நியாயாதிபதியாய் சரியாய் நியாயந்தீர்க்கக் கூடியவர். நாம் மற்றவர்களை நியாயந்தீர்த்தால், அது தீமை ஆகும்.

ஏதோவொன்றை தவறாக ஒருவர் செய்தது தெளிவாய் தெரிகிறது என்று வைத்துக்கொள்வோம். இந்த சூழ்நிலையில், ஆவிக்குரிய அன்புள்ள நபருக்கு, அந்த நபர் செய்தது சரியா அல்லது தவறா என்பது முக்கியமல்ல. அவர் அந்த நபருக்கு எது ஆதாயமாயிருக்கும் என்று நினைத்து பார்ப்பார். அது மீறுதல்களை மூடுவது மாத்திரமல்ல, அந்த நபர் பாவங்களை அறிக்கை செய்ய ஏதுவாக உதவவும் கூடும். பல தப்பிதங்களை உடையவர்களையும்கூட நாம் நேசிக்கவேண்டும், ஆகவே தவறு ஏதுமே இல்லாதவர்களை நேசிப்பது இயல்புதானே. நீங்கள் எளிதாக பிறரை நியாயந்தீர்த்து குற்றஞ்சாட்டுகிறவர்களாய் இருப்பீர்களேயானால் உங்களிடத்தில் ஆவிக்குரிய அன்பு இல்லை என்று உணரவேண்டும்.

**3. தேவனுடைய சித்தத்திற்கு ஒத்துப்போகாத நினைப்பு உங்களுக்கு இருக்குமேயானால் நீங்கள் அதை அகற்ற வேண்டும்.**

இந்த உலகில் உயர்வான நன்நெறிகளாலும் மனச்சாட்சியினாலும் வாழ்கிற மக்கள் தான் நல்ல மனிதர்களாக கருதப்படுகின்றனர். ஆனால் அப்படிப்பட்ட உயர் நன்நெறி மற்றும் மனசாட்சியும் கூட சரியான நற்குண அளவாய் இருக்கமுடியாது. காரணம், தேவனுடைய வார்த்தைக்கு விரோதமாய் இன்னும் பல காரியங்கள் அதில் உள்ளன. தேவனுடைய வார்த்தை மட்டுமே பரிபூரணமான நற்குணத்தின் நிலையாய் இருக்கமுடியும். வார்த்தைக்கு உரியதாயிராத அனைத்தும் தீமையும் பாவங்களுமாய் இருக்கின்றன.

ஒருவர் ஆண்டவரை ஏற்றுக்கொள்ளும்போது, தான் ஒரு பாவி என்று அறிக்கை செய்வார். தான் நற்குணத்தில் வாழ்ந்ததாக அவர் நினைத்திருக்கலாம். ஆனால் தேவனுடைய வார்த்தையின் வெளிச்சத்திலே அவர் நினைத்து பார்க்கும்போது தனக்குள் இருந்து பல தீமைகள் வெளிவருவதை அவர் கண்டறிவார். ஆகவே "தான் ஒரு பாவி" என்று அவர் அறிக்கை செய்வார்.

இங்கு பாவம் மற்றும் தீமை ஆகிய இவ்விரண்டையும் மரத்தின் ஒப்புமை வைத்து இவற்றிற்கிடையில் உள்ள வித்தியாசத்தை உங்களுக்கு நான் விளக்குகிறேன். "தீமை" என்பது நிலத்தில் உள்ள வேர் போல இருக்கிறது, அதைப் பார்க்க முடியாது. "பாவம்" மரத்தின் கிளைகள், இலைகள், பழங்கள் போன்று உள்ளது. கிளைகள், இலைகள் மற்றும் பழங்கள் வேரிலிருந்து தோன்றுவதுபோல "தீமை" என்ற வேரிலிருந்து வந்த கனியே "பாவம்" ஆகும்.

தீமை என்பது நிலத்தில் ஆழமாய் மறைந்துள்ள வேரைப்போல ஒரு மனிதனின் இருதயத்தில் உள்ள இயல்பு ஆகும். இந்த தீமை, குறிப்பிட்ட செயல் அல்லது நினைவின் மூலமாய் கலவையாய் வெளிப்படும்போது அது "பாவம்" என்று குறிப்பிடப்படுகிறது. லூக்கா 6:45 "நல்ல மனுஷன் தன் இருதயமாகிய நல்ல பொக்கிஷத்திலிருந்து நல்லதை எடுத்துக் காட்டுகிறான்; பொல்லாத மனுஷன் தன் இருதயமாகிய பொல்லாத பொக்கிஷத்திலிருந்து பொல்லாததை எடுத்துக் காட்டுகிறான்; இருதயத்தின் நிறைவினால் அவனவன் வாய் பேசும்" என்று கூறுகிறது.

ஒரு நபர் தான் வெறுக்கும் ஒருவரை கெட்ட வார்த்தை பேசி, அடித்து அவரை துன்புறுத்துவதாக வைத்துக்கொள்வோம். இது அவன் இருதயத்தில் தீமையாயிருந்த "வெறுப்பு" என்ற இயல்பினால், "தீமையான வார்த்தை" மற்றும் "அடித்தல்" போன்ற குறிப்பிட்ட பாவங்களாக உணரப்படுகிறது. ஆனால் தங்கள் இருதயத்தில் தீமை இருந்தாலும் எல்லா மனிதர்களும் பாவம் செய்கிறது இல்லை. அவர்கள் திறமாய் தன்னடக்கத்துடன் அல்லது தேவனுடைய வார்த்தையால் தங்களை தாங்களே கட்டுப்படுத்துவார்களேயானால், இந்த தீமை பாவமாக வெளிவராது. ஆனால் அவர்கள் இருதயத்தில் தீமை இன்னமும் இருப்பதால் அவர்கள் பரிசுத்தமானவர்கள் என்று அழைக்கப்பட முடியாது. அவர்கள் தங்கள் இருதயத்திலிருந்து பாவ இயல்புகளை அகற்றிவிடும்போது மட்டுமே, அவர்கள் பரிசுத்தவான்கள் என்று அங்கீகரிக்கப்பட்டு ஆவிக்குரிய அன்பை பெற்றுக்கொள்வர்.

தேவன் அன்பாகவே இருக்கிறார். அடிப்படையாக தேவனுடைய கற்பனைகளையெல்லாம் "அன்பு" என சுருக்கிவிடலாம். ஆகவே நாம் மற்றவர்களை வெறுப்பது மட்டுமல்ல, மற்றவர்களை நேசியாமல் இருந்தாலே அது தீமையும் பாவமுமாயிருக்கிறது என்பதைக் குறித்து விழிப்பாய் இருக்கவேண்டும். ஆகவே எல்லா வகையான தீமைகளையும் அகற்றி மற்றவர்களை இன்னும் அதிகமாய் நாம் நேசிக்கவேண்டும்.

## 2. ஆவிக்குரிய அன்பை பெற

எல்லாவற்றிற்கும் மேலாக, நாம் சத்தியமற்றவற்றை பார்க்கவோ அல்லது கேட்கவோ கூடாது. சத்தியமற்றவைகளை நாம் பார்க்கவோ அல்லது கேட்கவோ நேர்ந்தால், நாம் அதை ஞாபகம் வைத்துக் கொள்ளவோ அல்லது மீண்டும் நினைத்து பார்க்கவோ முயற்சிக்கக் கூடாது. ஆனால் பிரச்சனை என்னவென்றால், அவைகளை விட்டு விடுபடுவதற்கு நீங்கள் கடினமாய் முயற்சிக்கும்போது அதைப்பற்றிய நினைப்பு உங்களுக்கு வந்து கொண்டேயிருக்கும். பின், நீங்கள் ஊக்கமாய் ஜெபித்து பரிசுத்த ஆவியின் உதவியை பெற்றுக்கொள்ள வேண்டும். அறிந்தபடியே, நாம் வேண்டுமென்றே அப்படிப்பட்ட காரியங்களை நினைக்கவோ அல்லது ஞாபகம் வைத்துக்கொள்ளவோ கூடாது. மேலும்கூட, க்ஷணபொழுதில் நம் சிந்தையில் பளிச்சிடும் அப்படிப்பட்ட எண்ணங்களை கூட நாம் அகற்றவேண்டும். ஆம், நாம் தீமையான செய்கையில் ஈடுபட கூடாது.

மனிதர்கள் பாவ இயல்புகளை தங்கள் பெற்றோர்களிடத்திலிருந்து பெற்று வாழ்வில் பல உண்மையற்றவைகளுடன் தொடர்பு கொள்ள நேரிடுகிறார்கள். இந்த பாவ இயல்புகள் மற்றும் உண்மையற்றவைகள் ஆகியவற்றின் அடிப்படையில் ஒரு நபர் 'சுயம்' என்ற தோற்றத்தை உருவாக்குகிறார். ஆகவே பாவ இயல்புகளையும் உண்மையற்றவைகளையும் அகற்றுவதற்கு நமக்கு பொறுமையும் முயற்சியும் அவசியம். நாம் சத்தியத்தை காட்டிலும் சத்தியமற்றவைகளை நன்கு அறிந்திருக்கிறோம், ஆக சத்தியமற்றவைகளை அகற்றுவதற்கு பதிலாக அதை ஏற்றுக்கொள்வது என்பது ஒப்புமையில் எளிது. நீங்கள் பேரார்வத்துடன் யாரையாவது நேசிப்பீர்களேயானால், அந்த நபருக்கு எது பிடிக்காதோ அதை நீங்களும் விரும்பமாட்டீர்கள். இதை போலவே, தேவனை நாம் எல்லாவற்றைக் காட்டிலும் அதிகம் நேசிக்கும்போது நாம் அவருடைய கற்பனைகளைக் கைக்கொண்டு எல்லாவகையான தீமைகளையும் அகற்ற முடியும்.

அடுத்ததாக, ஆவிக்குரிய அன்பை பெற்றிட நாம் தேவனுடைய வார்த்தையை நம்முடைய "ஜீவ அப்பமாக" புசித்து அக்கினிபோன்ற ஜெபத்தை ஏறெடுக்கவேண்டும். நாம் இரவும் பகலும் தேவனுடைய வார்த்தையை தியானிக்கும்போது, தீமையான சிந்தைகளை நாம் அகற்றி நல் எண்ணங்களை பெறலாம். மேலும், நாம் ஊக்கமாக ஜெபிக்கும்போது, நம்முடைய எண்ணத்தில், வார்த்தையில் மற்றும் கிரியைகளில் நாம் இதுவரை பார்த்திராத தீமைகளை கண்டுணரமுடியும். பின், நாம் அதை அகற்றிவிடலாம்.

பிரியமான சகோதர சகோதரிகளே, ஆவிக்குரிய அன்பு தீங்கு நினையாது. தேவனுடைய வார்த்தையாலும், அக்கினி ஜெபத்தாலும் எல்லாவகையான தீமைகளையும் துரிதமாய் அகற்றுவதின்மூலம் சத்தியத்தில் நடந்து, எப்போதும் நற்குண சிந்தையுள்ள ஆவிக்குரிய மனிதர்களாய் நீங்கள் மாற வேண்டும் என ஆண்டவருடைய நாமத்தினால் ஜெபிக்கிறேன்.

## விசுவாச அறிக்கை

1 மான்மின் மத்திய திருச்சபை, வேதாகமம் தேவனால் உச்சரிக்கப்பட்டபரிபூரணமும் பிழையற்றதுமான வார்த்தை என நம்புகிறது.
2 மான்மின் மத்திய திருச்சபை திரித்துவ தேவனின் ஐக்கியத்தையும் கிரியை களையும் நம்புகிறது. பரிசுத்த பிதாவாகிய தேவன், பரிசுத்த குமாரனாகிய தேவன் மற்றும் பரிசுத்த ஆவியாகிய தேவன்
3 மான்மின் மத்திய திருச்சபை, இயேசுகிறிஸ்துவின் மீட்கும் இரத்தத்தினால்மாத்திரமே நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்படுகின்றது என நம்புகிறது.
4 மான்மின் மத்திய திருச்சபை, இயேசுகிறிஸ்துவின் உயிர்த்தெழுதலையும்,பரமேறுதலையும் அவரின் இரண்டாம் வருகையையும், 1000 வருட அரசாட்சியையும், நித்திய பரலோகத்தையும் நம்புகிறது.
5 மான்மின் மத்திய திருச்சபை, உறுப்பினர்கள் ஒவ்வொரு முறையும் அவர்கள் கூடி வரும்போதெல்லாம் தங்களது விசுவாச அறிக்கையை, "அப்போஸ்தலருடைய விசுவாச பிரமாணத்தின்" மூலமாக அறிக்கை செய்து அதின் சொற்படியான உள்ளடகத்தை நம்புகின்றனர்.
"எல்லோருக்கும் ஜீவனையும் சுவாசத்தையும் சகலத்தையும் கொடுக்கிற அவர் (தேவன்)" அப்போஸ்தலர் (17:25).
"அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை" அப்போஸ்தலர் (4:12).

மான்மின் சர்வதேச பாடசாலை
இந்திய வளாகம்
Manmin International Seminary - India campus belongs to the United Holiness Church of Korea of which the chairman of the board of directors is Rev.Dr. Jaerock Lee. It is based on the fivefold Holiness gospel: Regeneration, Sanctification, Divine Healing, Resurrection, and Return of Christ.
DIPLOMA IN CHRISTIAN MINISTRY
(One year correspondence programme)
15D/41, Ponnankinaru Street, Villivakkam, Chennai - 600 049.
Tel:044 - 26172471, Email : indiamis@gmail.com





மான்மின் மத்திய திருச்சபையின் 30வது ஆண்டுவிழா கொண்டாட்ட நிகழ்ச்சி

## கே நடனமாடி துதி செலுத்த விரும்புகிறேன். துதியின் மூலமாக தேவன் பதிலளித்து ஆசீர்வதிப்பார் என்று கேள்விப்பட்டேன். பின், எவ்வகையான துதிகளில் தேவன் பிரியப்படுகிறார்?

ப துதி’ என்பது தேவனுக்கு செலுத்தும் மரியாதை, கனம் மற்றும் நன்றியின் வார்த்தையாய் இருக்கிறது. இதே வகையில்தான் வேதாகமத்தில் துதி என்பது சங்கீதங்கள், பாட்டுகள், இசை நிகழ்ச்சிகள், நடனம் மற்றும் மனிதர்களுடைய வார்த்தைகள் மற்றும் செய்கையின் மூலமாக தேவனுடைய மகிமை, மேன்மை மற்றும் அவருடைய கிரியைகள் அனைத்தையும் பிரதிநிதிப்படுத்துவதை குறிக்கிறது.

சங்கீதம் 150:3–5ல் வாசிக்கிறோம், “*எக்காள தொனியோடே அவரை துதியுங்கள், வீணையோடும் சுரமண்டலத்தோடும் அவரைத் துதியுங்கள், தம்பு ரோடும் நடனத்தோடும் அவரைத் துதியுங்கள்; யாழோடும் தீங்குழலோடும் அவரைத் துதியுங்கள், ஓசையுள்ள கைத்தாளங்களோடும் அவரைத் துதியுங்கள்; பேரோசையுள்ள கைத்தாளங்களோடும் அவரைத் துதியுங்கள்.*” இந்த பகுதி நாம் தேவனை நடனத்தோடும் பலவகையான இசைக் கருவிகளோடும் துதிக்க வேண்டும் என்று கூறுகிறது.

உலகப்பிரகாரமான பாடல்களில் ஜீவன் இல்லை. ஆகவே அவைகளை பாடுவது உங்கள் தொழில்கள் அல்லது வேலை ஸ்தலத்தில் ஆசீர்வாதத்தை கொடுக்காது. அது நீங்கள் ஆரோக்கியமான ஆசீர்வாதமான வாழ்க்கை நடத்தவும் உதவாது. ஆனால் தேவனை ஆராதித்து மகிமைப்படுத்தும்படி நாம் ஏறெடுக்கும் துதிபாடல்கள் ஜீவனுள்ளது. ஆகவே அது நம் வாழ்வில் மகிழ்ச்சியை தந்து நம் ஆத்துமா செழித்தோங்க உதவுகிறது. அது அபரீதமான ஆசீர்வாதங்களுக்கு நேராக நம்மை நடத்துகிறது.

வேதாகமம் அநேகமான வசனங்களில் நாம் தேவனை துதித்து மகிமைப்படுத்த வேண்டும் என்று கூறுகிறது. ரோமர் 11:36 மற்றும் 1கொரிந்தியர் 10:31ல் வாசிக்கிறபடி நாம் அவரை மகிமைப்படுத்தும்படி தேவன் நம்மை உருவாக்கியிருக்கிறார். அவர் நம்மை மரணத்தினின்று ஜீவனுக்கு நம்மை இரட்சித்தார்; துதிகளில் அவர் வீற்றிருக்கிறார் (சங்கீதம் 22:3).

நீங்கள் பார்க்கிறபடியே, தேவன் நமது துதிகளை பெற்றுக்கொள்ள பாத்திரராய் இருக்கிறார். அப்படியானால், தேவன் பிரியப்படுகிற துதிகளை நாம் இரண்டு கோணங்களில் பார்ப்போம்.

> *பரலோகத்திற்கான நம்பிக்கையும், மகிழ்ச்சியும், ஸ்தோத்திரமும் நிறைந்துள்ள துதிகளில் தேவன் மனமகிழ்ச்சியடைகிறார்.*

வித்தியாச வகைகளான துதி பாடல்கள் இருக்கின்றன: பாவ அறிக்கை துதி பாடல்கள், தேவனளித்த நமது கடமைகளுக்கான துதிபாடல்கள், பரலோகத்திற்கான நம்பிக்கையின் துதி பாடல்கள் போன்ற பல.

தேவனுடைய வார்த்தைக்கு புறம்பாய் ஜீவித்து பாவம் செய்வதால், பரிசுத்த ஆவியை நாம் இழக்கும்போது வியாகுலத்தில் துக்கத்துடன் பாவ அறிக்கை துதி பாடல்கள் ஏறெடுக்கப்படுகின்றன. வேறு வகையான துதி என்னவென்றால், தேவனளித்த நமது கடமைகளை நாம் சரியாய் சிறப்பாய் செய்வதற்காக நாம் ஏறெடுக்கும் துதிகள். பரலோகத்திற்கான நம்பிக்கை, மகிழ்ச்சி மற்றும் ஸ்தோத்திரத்தினால் ஏறெடுக்கப்படும் துதிகளும் இருக்கின்றன. தேவன் நீங்கள் நம்பிக்கையோடும் மகிழ்ச்சியோடும் ஸ்தோத்திரத்துடனும் ஏறெடுக்கிற இவ்வகையான துதிகளில் தான் அதிகம் மனம் மகிழ்கிறார். இது தான் வாழ்வின் மெய்யான துதி.

அப்போஸ்தலர் 16–ம் அதிகாரம் பவுல் சீலாவை குறித்து பேசுகிறது. அவர்கள் ஊக்கமாக இயேசு கிறிஸ்துவை பிரசங்கித்தார்கள். இறுதியாக, அவர்கள் மிலாறினால் அடிக்கப்பட்டு கை, கால்கள் தொழுமரத்தில் மாட்டிவைக்கப்பட்ட நிலையில் சிறையில் தள்ளப்பட்டனர். ஆனால் சிறைச்சாலையில் அவர்கள் ஜெபித்து தேவனை துதித்து பாடினார்கள். அந்த துதி தேவனுடைய மகிமைக்காக உபத்திரவங்களை அனுமதித்ததற்காக நன்றியாலும் பரலோகத்தின் நம்பிக்கையாலும் நிறைந்திருந்தது. அதன் பின்பு உடனே, தேவன் சிறைச்சாலையின் கதவுகளை திறந்து அவர்கள் கட்டுகளை அறுத்துவிட்டார். இந்த நிகழ்வின் மூலமாக சிறைச்சாலை தலைவனின் குடும்பத்தையும்கூட இரட்சிப்பிற்குள் வழி நடத்தினார்.

தேவன் நிச்சயமாகவே ஜீவிக்கிறார். ஆகவே நீங்கள் பரலோகத்தின்மேல் நம்பிக்கை வைத்து மகிழ்ச்சியோடு அவரை துதித்து அவருக்கு ஸ்தோத்திரம் செலுத்தும்போது அவர் நிச்சயமாக உங்களுக்கு பதிலளிப்பார்.

மேலும், சில மக்கள் இருதயத்தின் ஆழத்திலிருந்து துதிப்பார்கள். அவர்களது துதியின் வேளை உயிரோட்டமுள்ளதாய் இருக்கும், இப்படியிருக்க மற்றவர்களது குரல் இனிமையாய் இருந்தாலும்கூட, சம்பிரதாயமாக உதடுகளினால் துதிப்பார்கள்.

அவர்கள் குரல் எவ்வளவு அழகாக இருந்தாலும்கூட, தங்கள் இருதயத்தின் தூபத்தோடு துதிக்கவில்லையென்றால், தேவன் அதை ஏற்றுக்கொள்ள மாட்டார். நம்முடைய முழு இருதயத்தோடும், விருப்பத்தோடும், பெலத்தோடும் அவர் பேரிலுள்ள அன்போடு பரலோகத்திற்கான நம்பிக்கையோடு துதிக்கும்போது மட்டுமே அவர் அந்த துதியை மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொள்வார். உண்மையில், இப்படிப்பட்ட இருதயம், அழகான குரல் ஆகிய இரண்டுமே நமக்கு இருந்தால் அது சிறப்பான துதியாய் இருக்கும்.

> *முழு மனதோடு ஏறெடுக்கப்படும் துதியில் தேவன் மன மகிழ்கிறார்*

நம் முழு மனதோடும் ஏறெடுக்கப்படுகிற துதி பரிசுத்தமும் பழுதற்றதுமாயிருக்க வேண்டும். தேவனிடத்தில் குறை இல்லை, கறை இல்லை. அவர் பரிசுத்தராயிருக்கிறார், அவர் அன்பாகவே இருக்கிறார். நாம், அவருடைய பிள்ளைகளாக, பரிசுத்தமும் தீமை ஏதுமே இல்லாத தூய்மையுமான இருதயத்துடனும் அவருக்காக நிரம்பி வழிகிற அன்புடனும் துதிக்கிறவர்களாய் இருக்கவேண்டும். நம்முடைய வெளிப்புற தோற்றமும், சுத்தமாகவும் துப்புரவாகவும் இருக்கவேண்டும். ஜெபத்துடன் ஆயத்தப்பட்டதுதான் இருதயத்தால் துதிப்பது ஆகும். ஏதோவொன்றை அடையப்பெற வழுவா முயற்சியுடன் முன்னதாகவே நன்கு ஆயத்தப்படுகிறது எப்படி அவசியமோ அதுபோல, தேவனுக்கு மிக அழகானா நளினமான துதியை ஏறெடுப்பதற்கு மனமார்ந்த ஆயத்தம் நமக்கு அவசியம். எல்லா ஆயத்தங்களுக்கும் மேலாய் ஜெபம்தான் மிக உயரிய முன்னுரிமையாய் இருக்கிறது. நாம் ஜெபிக்கும்போது மட்டுமே எப்பொழுதும் சந்தோஷமாயிருக்கவும், ஸ்தோத்திரம் செலுத்தவும் முடியும். மேன் மேலும் நாம் அக்கினி ஜெபத்தை ஏறெடுக்கும்போது, எப்போதும் சமாதானத்தை அனுபவித்து, கண்களின் இச்சை, மாம்சத்தின் இச்சை, ஜீவனத்தின் பெருமை ஆகியவற்றிலிருந்து விடு பெறுவதால் பரிசுத்தத்தை பெறமுடியும். பின் நாம் தேவனுக்கு பிரியமான துதிகளை அவருக்கு ஏறெடுக்க முடியும்.

கூடுதலாக, இருதயத்தின் துதி ஆவியின் வெளிப்பாட்டினால் ஏறெடுக்கப்படுகிறது. துதி கவனிப்போர்களுக்கு கிருபையளித்து அவர்கள் இருதயங்களை அசைக்கவேண்டும். இப்படி செய்வதற்கு துதி செலுத்துபவர் முதலாவது ஆவியின் வெளிப்பாட்டை பெற்றுக்கொள்ள வேண்டும். அப்படி செய்தால் மட்டுமே அவர்களால் தங்கள் இருதயத்தோடு உணர்ச்சிகள் பொங்க துதி செலுத்த முடியும். தேவன் இதை மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொள்வார்.

தேவனை பிரியப்படுத்துகிற துதி ஜனங்களை பரிசுத்த ஆவியால் நிரப்பி, அவர்கள் ஆத்துமாவை திருப்தியாக செய்து அவர்கள் வாழ்வை மாற்றும். அது துக்கம் நிறைந்த மனிதர்களுக்கு ஆறுதலையும் (சங்கீதம் 105: 2–3), அது உடைந்த உள்ளத்தை குணமாக்கும் (1சாமுவேல் 16:23); அது ஒருவர் எல்லா கஷ்டங்களையும் மேற்கொள்ள உதவும். அது நாம் தேவனுடைய உதவியைப் பெற செய்கிறது (அப்போஸ்தலர் 16: 25–26), எந்த சூழ்நிலையிலும் நாம் வெட்கப்பட்டு போகாதபடி நம்மை பாதுகாக்கிறது (யோவேல் 2:26), நம்முடைய மனோவாஞ்சைகளுக்கு நாம் பதிலை பெற உதவுகிறது. துதியின் மூலமாக, நாம் பல ஆசீர்வாதங்களை அனுபவிக்க முடியும்.

GCN
GLOBAL · CHRISTIAN · NETWORK
Tel: 044-26172471
www.gcntv.org
e-mail: gcntvindia@gmail.com

MIS
Manmin International Seminary
Tel: 044-26172471
www.manminseminary.org
e-mail: indiamis@gmail.com

Chennai Manmin Holiness Church
15D/41, Ponnan Kinaru Street,
Villivakkam, Chennai - 600 049
PH: 044-26172471,



Land Mark

# மான்மின் சர்வதேச கலாசாலை (MIS) பரிசுத்த சுவிசேஷத்துடன் உலகமெங்கும் போதகர்களை பயிற்சித்து கொண்டு இருக்கிறது.

"சமுத்திரம் ஜலத்தினால் நிறைந்திருக்கிறதுபோல், பூமி கர்த்தருடைய மகிமையை அறிகிற அறிவினால் நிறைந்திருக்கும்" – ஆபகூக் 2:14



அறிவர். எஸ்தர் ச்சங்
[MISன் தலைவர்]

மான்மின் ஊழியத்தினால் கவரப்பட்டு பரிசுத்த சுவிசேஷத்திற்காக ஏங்கும் பல போதகர்கள் உள்ளனர். அவர்கள் தங்கள் பகுதிகளில் கலாசாலையின் நிலைநாட்டுதலை வேண்டி இறையியல் பிரசங்கங்களை கேட்க விரும்பினர். இறுதியாக 2005ம் ஆண்டு மார்ச் 17 அன்று இணையதளத்தின் மூலம் பிரசங்கங்கள் கிடைக்கக்கூடியவாறு ஏற்பாடு செய்யப்பட்டன. ஏப்ரல் 17 அன்று MIS, அயல்தேச மாகாணத்தின் மிஷனரி பயிற்சி நிகழ்ச்சியில் கொடுக்கப்பட்ட அதன் முதல் பிரசங்கத்துடன் துவங்கியது.

MIS என்பது உள்ளூர் பணித்தளப் பகுதிகளில் வேலை செய்யவிருக்கும் தகுதிவாய்ந்த போதகர்களை பரிசுத்தமாகுதலின் ஐந்து – வித சுவிசேஷத்துடன், அவர்களுக்கு முறையாக கல்வி கற்றுக் கொடுத்து பயிற்சி கொடுக்க வேண்டும் என்ற இலக்குடன் இருக்கும் ஒரு இறையியல் கலாசாலை ஆகும். தற்போது MIS, வேதாகம கருத்தரங்குகளை அமெரிக்க ஐக்கியம், ஐரோப்பா மற்றும் லத்தீன் அமெரிக்க நாடுகளில் தொடர்ந்து நடத்தி கொண்டிருக்கிறது. இந்த கலாசாலை தேவனுடைய சித்தத்தையும், அநாதி தீர்மானத்தையும் பல போதகர்களுக்கும், சபைத் தலைவர்களுக்கும் பேருரையாக வழங்கி கொண்டிருக்கிறது.

ஜீவ வார்த்தையால் அவர்கள் ஒருமுறை விழித்தெழுப்பி விடப்பட்டவுடன், அவர்கள் மேய்த்து கொண்டிருக்கிற திருச்சபை அங்கத்தினர்களை நிலைமாற்றம் செய்யமுடியும். இவ்வாறு எண்ணற்ற ஆத்துமாக்கள் தேவன் விரும்புகிற தேவனுடைய மெய்யான பிள்ளைகளாய் மாறும்படி வழி நடத்தப்படுவர். ஆகவே, MIS இந்த கடைசி காலகட்டத்தில் தேவனுடைய வார்த்தையையும், வல்லமையையும் வேகமாய் பரப்புவதால் ஆண்டவருடைய மாபிரதான கட்டளையை நிறைவேற்றுவதில் பெரும்பங்கு வகிக்கிறது.

MIS, தனது இலக்கிய நடைவகையில் மணிச்செறிவு வாய்ந்த ஊழியத்துடன் தேவனை மகிமைப்படுத்துகிறது. எப்போதெல்லாம் தலைவர் அறிவர். எஸ்தர் ச்சங் அவர்கள் "விசுவாசத்தின் அளவு", "சிலுவையின் செய்தி", "ஆவி ஆத்துமா சரீரம்", "பரலோகம்" மற்றும் "நரகம்" போன்ற கிறிஸ்தவ வாழ்வின் அடிப்படை செய்திகளுடன் கருத்தரங்கு நடத்துகிறார்களோ, அப்போதெல்லாம் நூற்றுக்கணக்கான அல்லது ஆயிரக்கணக்கான போதகர்கள் தேவனுடைய வார்த்தையின் ஆவிக்குரிய அர்த்தங்களை புரிந்து கொள்வதால் தொடப்பட்டு மான்மின் மத்திய திருச்சபையுடன் இணைந்து செயல்பட விரும்புகின்றனர். நூற்றுக்கணக்கான திருச்சபைகள் ஏற்கனவே கிளை அல்லது இணை சபைகளாக பதிவு செய்துள்ளனர்.

MISன் தலைமையகம் சீயோலில் உள்ளது. அதன் கல்வி கூடங்கள், பெல்ஜியம், அமெரிக்க ஐக்கியம், ரஷ்யா, இந்தியா, சீனா, தைவான், ஐக்கிய ராஜ்ஜியம், பெரு போன்ற இடங்களில் உள்ளன. மாணவர்கள் இணையதளத்தில் உள்ள பிரசங்கங்களையும் கேட்கலாம். நீங்கள் MIS இணையதளத்தை www. manminseminary.org க்குள் சென்று, அங்கத்தினராக பதிவு செய்து, படிவத்தை பூர்த்தி செய்யவும், பின் விண்ணப்பபடிவும் முடிவடைந்திடும்.



மான்மின் சர்வதேச கலாசாலை (MIS)யின் இணையதளம்

இணையதளம், ஆங்கிலம், ரஷ்யம் மற்றும் ஸ்பானியத்திலும் உள்ளன. கூடுதலாக, ஜப்பானிய பாடத்திட்டம் டிசம்பர் 2009 முதல் துவங்கியுள்ளது.

## மான்மின் சர்வதேச கலாசாலை

### ◆ கல்வி காலம்

ஒரு பாடத்திட்டம் 1 அல்லது 2 மாதங்கள் வரை இருக்கும். உள்நாட்டு போதகர்கள், சபை தலைவர்கள் மற்றும் வேலையாட்களுக்கும் பாடத்திட்டங்கள் உள்ளன. மாணவர்கள் தங்களது இரண்டு ஆண்டு கால பாடத்திட்டத்தை முடித்தப்பின்னர் பட்டம் பெறலாம்.

### ◆ கல்வி பாடங்கள்

MIS-ன் பாடத்திட்டம், துவக்க பாடங்களாக "சிலுவையின் செய்தி", "விசுவாசத்தின் அளவு", "ஆவி ஆத்துமா சரீரம்", மற்றும் "ஜெபம்" ஆகியவற்றையும், நடுநிலைப்பாடங்களாக, "பரிசுத்த ஆவி", மெய்யான ஆசீர்வாதம்", மற்றும் "அன்பின் அத்தியாயம்" ஆகியவற்றையும், முதுநிலை பாடங்களாக "பரலோகம்", "நரகம்", "சபை வளர்ச்சியின் இரகசியங்கள்" மற்றும் "ஆதியாகமம்" ஆகியவற்றையும் உள்ளடக்கியிருக்கிறது. "வெளிப்படுத்தின விசேஷம்", "1கொரிந்தியர்" மற்றும் "யோபு" பிரசங்க தொடர்களும், "கடினமான வசனங்களை புரிந்துகொள்ளுதல்" போன்ற சிறப்பு செய்திகளும் உள்ளன. மாணவர்கள் துவக்க, நடுநிலை மற்றும் முதுநிலை பாடத்தில் உள்ள அனைத்து பாடங்களையும், தேவையான பாடங்களாய் எடுத்துக் கொண்டு கற்கவேண்டும். சிறப்பு செய்திகளையும், பிரசங்க தொடர்களையும் கேட்க அவர்கள் தேர்வு செய்து கொள்ளலாம்.

### ◆ இணையதள பிரசங்கங்களும், உள்நாட்டு கல்விகூடத்தில் உள்ள பாடத்திட்டங்களும்.

மாணவர்கள் துவக்க முதல் முதுநிலை வரை தங்கள் பாடத்திட்டங்கள் அனைத்தையும் முடித்தபின்னர், MIS எங்கள் திருச்சபைக்கு கூடுமானால் மாணவர்கள் வர ஊக்குவிக்கிறது. அவர்கள் தானியேல் ஜெபக்கூடுகையில் பங்கு பெற்று மாகாண தலைவர்களுடன் இணைந்து அங்கத்தினர்கள் வீடுகளுக்கு விஜயம் செய்யவும், மூவான் மதுர தண்ணீர் இடத்தை சென்று பார்க்கவும் விரும்புகிறது.

## "தேவனை நாம் உண்மையாக நேசித்தால் கிறிஸ்தவ வாழ்வு மிக எளிது என்பதை MIS மூலமாக கண்டறிந்தேன்."



போதகர். பெர்சியாள் ராஜதுரை,
[மதுரை மான்மின் பரிசுத்த ஆலயம்]

எனது தகப்பனார் போதகர் வை.ராஜதுரை அவர்கள் கடந்த பின்னர், நான் இந்தியாவிலுள்ள மதுரை மான்மின் பரிசுத்த ஆலயத்தில் போதகராக இருந்து வருகிறேன். நான் திருச்சபையின் பொறுப்பை எடுத்துள்ளேன். ஒருவேளை என் வாழ்வு மாறாமல் இருந்திருக்குமேயாயின், நான் சபையில் ஊழியம் செய்வது என்பது எனக்கு கூடாத காரியம் ஆகியிருக்கும்.

என்னுடைய பெற்றோர், நான் கர்த்தருடைய ஊழியக்காரியாக மாறவேண்டும் என்று விரும்பினாலும்கூட நான் அதைக்குறித்து நிச்சயம் இல்லாதவளாக இருந்தேன். எனது கிறிஸ்தவ வாழ்வில் அநேக ஆவிக்குரிய கேள்விகளுக்கு பதில் பெறாமல் இருந்தேன். அச்சமயத்தில்தான், எல்லா கேள்விகளுக்கும் தெளிவான பதில்கள் நிறைந்துள்ள அறிவர்.ஜேராக் லீ அவர்களது புத்தகங்களை படிக்கலானேன்.

நான் வாசித்த முதல் புத்தகம் அறிவர். ஜேராக் லீ அவர்களது சாட்சி புத்தகமான "மரணத்திற்கு முன் நித்திய வாழ்வை ருசித்தல்" ஆகும். இந்த புத்தகத்தால் மிகவும் தொடப்பட்டதால், அறிவர். ஜேராக் லீ அவர்களால் பிரசங்கிக்கப்பட்ட ஜீவ வார்த்தையைக் கற்றுக் கொள்ள விரும்பினேன். அதிர்ஷ்டவசமாக, MIS இந்திய கல்விக்கூடத்தில் கற்றுக்கொள்ளும்படியான வாய்ப்பு எனக்கு கிடைத்தது. பாடத்திட்ட புத்தகங்களை "சிலுவையின் செய்தி" முதல் "ஆதியாகமம்" வரைக்கும் படிக்கலானேன். அதில், நமக்காக இரட்சிப்பின் அநாதி தீர்மானத்தை நிறைவேற்றிய பிதாவாகிய தேவன், கர்த்தராகிய இயேசுகிறிஸ்து மற்றும் பரிசுத்த ஆவி ஆகியோருடைய நிரூபணமான அன்பை கண்டுபிடித்தேன்.

இந்த அன்பை அறிந்துணர்ந்து, பலமுறை கண்ணீர் வடித்திருக்கிறேன். "நான் 'விசுவாசத்தின் அளவு', 'பரலோகம் I & II' மற்றும் 'நரகம்' ஆகியவற்றை படிக்கும்போது என் முகத்தில் கண்ணீர் வழிந்தோடியது. முன்னதாக நான் கிறிஸ்தவ வாழ்வு மிக கடினம் என்று எண்ணி னேன். ஆனால் MIS படித்தபின்னர், நாம் உண்மையில் பிதாவாகிய தேவனை நேசித்தால் கிறிஸ்தவ வாழ்க்கை நடத்துவதற்கு கடினமாயிராது என்பதை அறிந்து கொண்டேன். விசுவாசத்தை குறித்த என்னுடைய தவறான வரையரையான கருத்துகளிலிருந்து உடைத்தெறிந்து வெளியே வர முடிந்தது.

வேதாகமம், விசுவாசம் என்றால் என்ன என்பதை தெளிவாக வரையறுத்து கூறினாலும், அதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. சாதாரணமாக கூறினால், எனக்கு மாம்சீக விசுவாசம் மட்டுமே இருந்தது. என் ஆவிக்குரிய விசுவாசம் வளர்வதற்கு எது தடைபண்ணியது என்று என்னால் அறிய முடியவில்லை. ஆனால் MIS மூலமாக காரணம் என்ன என்பதையும், என் பிரச்சனையை எவ்வாறு தீர்ப்பது என்பதையும் அறிந்து கொண்டேன். அவருக்கு நேராக உள்ள அன்பின்நிமித்தம் நாம் தேவனுடைய வார்த்தைக்கு கீழ்ப்படிய வேண்டும் என்றும் எல்லா வகையான பொல்லாப்புகளை நம்மைவிட்டு அகற்றி பாவத்திற்கு விரோதமாக இரத்தம் சிந்தப்படத்தக்கதாய் போராட வேண்டும் என்றும் கற்றுக்கொண்டேன்.

கிறிஸ்தவரல்லாத எனது தோழி ஒருவரிடம் அறிவர்.ஜேராக் லீ அவர்களது சாட்சி மற்றும் செய்திகளை நான் பகிர்ந்தேன். அவருக்கு அறிவர். ஜேராக் லீ அவர்களது சாட்சி புத்தகமான "மரணத்திற்கு முன் நித்தய வாழ்வை ருசித்தல்" என்ற புத்தகத்தை கொடுத்தேன். அதை வாசித்தபின் அவள் இயேசு கிறிஸ்துவை தனது சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு அப்புத்தகத்தை அவளது அக்கம்பக்கத்தினரிடம் கொடுத்தாள்.

தென் இந்தியாவில், தமிழ்நாட்டின் மூலை முடுக்குகளில் இந்த பரிசுத்த சுவிசேஷத்தை பரப்புவதே எனது தரிசனம். கிறிஸ்தவ குடும்பத்தில் வளர்க்கப்பட்டும் இன்னும் தேவனுடைய வார்த்தையை தெளிவாக புரிந்து கொள்ளாமல் இருக்கிற மக்களுக்கும்கூட உதவ வாஞ்சிக்கிறேன். பல புத்தகங்களை இயற்றி பல ஜனங்களுக்கு பரிசுத்த சுவிசேஷத்தை பரப்பி கொண்டு, MIS–யை ஸ்தாபித்து என் வாழ்வை மாற்றிய அறிவர்.ஜேராக் லீ அவர்களுக்கு என் நன்றியை தெரிவிக்க விரும்புகிறேன்.



திருச்சபை அங்கத்தினர்களுடன் போதகர். பெர்சியாள் ராஜதுரை.



மதுரை மான்மின் பரிசுத்த ஆலயம்